புதுச்சேரி அரசு
வேளாண் மற்றும் விவசாய நலத்துறை
வேளாண் கூடுதல் இயக்குநர் அலுவலகம் (தோட்டக்கலை)
தாவரவியல் பூங்கா, புதுச்சேரி
*****

**தேசிய தோட்டக்கலை இயக்கம் மூலம் பிந்தைய மானியம் பெறும் விண்ணப்பம்**

புதுச்சேரி அரசு வேளாண் மற்றும் விவசாய நலத்துறை, தோட்டக்கலை பிரிவில் உள்ள தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) மூலமாக தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வண்ணம் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

இவற்றின் ஓர் அங்கமாக காளாண் உற்பத்திக்கூடம் மற்றும் காளாண் விதை உற்பத்திக்கூடம் அமைத்தல்; பசுமைக்குடில் மற்றும் நிழல்வலைக்குடில் அமைத்தல்; பேக் ஹவுஸ் (Packhouse), குளிர்பதன கிட்டங்கி அமைத்தல், மற்றும் குளிர்சாதன வசதி கொண்ட வேன்; பழம் மற்றும் காய்கறி தள்ளுவண்டி (அல்லது) நிலைவண்டி ஆகியவற்றிற்கு கடன் இணைக்கப்பட்ட பின் மானியம்/ மூலதன செலவினத்தில் மானியம் பெறுவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இவ்விண்ணப்பங்களை தாவரவியல் பூங்காவில் இயங்கும் கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை) அலுவலகம் மூலமாகவோ அல்லது வேளாண் துறையின் இணையதளம் **(https://agri.py.gov.in)** மூலமாகவோ பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்த விண்ணப்பங்களை வரும் 15.11.2020 தேதிக்குள் மேற்கண்ட அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(மு. வேதாசலம்)
வேளாண் கூடுதல் இயக்குநர் (தோட்டக்கலை)